


dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 270 | 4 Pages | 28.4.2025 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 270 | 4 பக்கங்கள் | 28.4.2025 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**நெஞ்சின் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து**

**வாழ்வாரின் வன்கணா ரில்**

**விளக்கம்:**

**மனத்தில்பற்றுக்களைத்துறக்காமல்துறந்தவரைப் போல் வஞ்சனைச் செய்து வாழ்கின்றவரைப் போல் இரக்கமற்றவர் எவரும் இல்லை.**

## பஹல்காம் தாக்குதல் எதிரொலி இந்திய பயணத்தை தவிர்க்குமாறு கனடா எச்சரிக்கை




டொரான்டோ, ஏப்.28

ஜம்மு காஷ்மீரில் உள்ள பஹல்காம் பகுதிக்குச் சென்ற சுற்றுலாப் பயணிகள் மீது கடந்த 22ம் தேதி பயங்கரவாதக் கும்பல் கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தியது. இதில் 26 பேர் பரிதாபமாகக் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதல் சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தி இருந்தது. அதே சமயம் இந்த தாக்குதல் சம்பவத்திற்கு இந்தியா மட்டுமல்ல பல்வேறு நாட்டுத்தலைவர்களும் கடும் கண்டனம் தெரிவித்தனர். இதையடுத்து, பஹல்காம் உள்ளிட்ட ஜம்மு காஷ்மீரின் பல்வேறு பகுதியில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டு தீவிர கண்காணிப்பில் இந்திய ராணுவப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் பஹல்காம் தாக்குதலை அடுத்து ஜம்மு காஷ்மீர் பயணத்தை தவிர்க்குமாறு கனடா தனது நாட்டு மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. அட்டாரி வாகா எல்லை மூடப்பட்டதை சுட்டிக்காட்டி இந்தியா பாகிஸ்தான் எல்லைப்பகுதி கொந்தளிப்புடன் உள்ளதால் பயணத்தை தவிர்க்குமாறு கனடா எச்சரிக்கை விடுத்துள்ளது.

## நிபந்தனையற்ற போர்நிறுத்தம்.. டிரம்புடன் ஜெலென்ஸ்கி பேச்சுவார்த்தை



வாடிகன் சிட்டி, ஏப்.28

கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவரான போப் பிரான்சிஸ் (வயது 88), உடல்நலக்குறைவுகாரணமாக கடந்த 21ந் தேதி வாடிகனில் மரணம் அடைந்தார். அவரது உடல் கடந்த 23ந் தேதி முதல் வாடிகன் புனித பீட்டர் பேராலயத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

உலகம் முழுவதிலும் இருந்து லட்சக்கணக்கான மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து போப் ஆண்டவரின் உடலுக்கு இறுதி மரியாதை செலுத்தினர். இந்த சூழலில் இன்று (சனிக்கிழமை) உள்ளூர் நேரப்படி காலை 10 மணிக்கு போப் ஆண்டவரின் உடலுக்கு இறுதிச்சடங்கு நடைபெற்றது.

இதற்காக சிறப்பு வழிபாடு (திருப்பலி) நடத்தப்பட்டது. பின்னர் வாடிகனுக்கு வெளியே உள்ள புனித மேரி மேஜர் பசிலிக்கா பேராலயத்தில் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. அவரது விருப்பப்படியே அவருக்கு மிகவும் பிடித்தமான புனித மேரி பசிலிக்காவில் அடக்கம் செய்யப்பட்டது.

முன்னதாக உலக தலைவர்கள் ஏராளமானோர் புனித பீட்டர்ஸ் சர்ச்சில் இருந்த போப் பிரான்சிஸ் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர். அந்தவகையில் 50 நாடுகளின் தலைவர்கள் உள்பட 150 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்பை வாடிகன் நிர்வாக உறுதி செய்தது.

இதன்படி அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் தனது மனைவியுடன் வாடிகன் நகருக்கு சென்று போப் பிரான்சிஸ் உடலுக்கு அஞ்சலி செலுத்தினார். உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி, பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான், இங்கிலாந்து பிரதமர் கெயிர் ஸ்டார்மர், இளவரசர் வில்லியம், பிரேசில் அதிபர் லூலா டா சில்வா என பல நாடுளின் தலைவர்கள் வாடிகன் வந்து, இறுதி சடங்கில் பங்கேற்றனர்.

முன்னதாக போப் பிரான்சிசின் இறுதிச் சடங்கிற்கு முன்பு அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப், உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கியை சிறிது நேரம் சந்தித்தார் என்பதை வெள்ளை மாளிகை மற்றும் ஜெலென்ஸ்கியின் அலுவலகம் உறுதிப்படுத்தி இருந்தன.

இந்நிலையில் இந்த சந்திப்பு முழுமையான மற்றும் நிபந்தனையற்ற போர்நிறுத்தத்தில் கவனம் செலுத்தியதாக ஜெலென்ஸ்கி கூறினார். இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில், "இது ஒரு நல்ல சந்திப்பு. நாங்கள் நேரில் நிறைய விவாதித்தோம். நாங்கள் உள்ளடக்கிய அனைத்திலும் முடிவுகளை எதிர்பார்க்கிறோம். எங்கள் மக்களின் உயிர்களைப் பாதுகாத்தல். முழுமையான மற்றும் நிபந்தனையற்ற போர்நிறுத்தம். மற்றொரு போர் வெடிப்பதைத் தடுக்கும் நம்பகமான மற்றும் நீடித்த அமைதி. கூட்டு முடிவுகளை அடைந்தால், வரலாற்றுச் சிறப்புமிக்கதாக மாறக்கூடியதாக இந்த சந்திப்பு அமையும். அமெரிக்கா ஜனாதிபதிக்கு நன்றி" என்று அவர் பதிவிட்டுள்ளார்.

## ஈரான் வெடிவிபத்தில் 4 பேர் பலி 400க்கும் மேற்பட்டோர் படுகாயம்



தெஹ்ரான், ஏப்.28

ஈரானின் பந்தர் அப்பாஸ் துறைமுகத்தில் இன்று மிகப்பெரிய வெடிவிபத்து ஏற்பட்டுள்ளது. இந்த விபத்தில் 400க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என அரசு ஊடகங்கள்தெரிவிக்கின்றன.துறைமுகத்துக்குஅருகேஉள்ளகண்டெய்னர் யார்டில் ஏற்பட்ட வெடி விபத்தில் பலரும் படுகாயமடைந்தனர்.

இந்த பயங்கர் வெடி விபத்தில் அதிர்வலையானது பல கிலோமீட்டனர் தொலைவுக்கு அப்பாலும் உணரப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. தீயை அணைக்கவும் சிக்கியவர்களை மீட்கவும் தீயணைப்பு துறையினர் முயன்று வருகின்றனர். இந்த விபத்து காரணமாக துறைமுகத்தில் ஒரு அதிகளவு கரும்புகை காணப்பட்டது.

இந்த நிலையில் ஈரானில் ஏற்பட்ட பயங்கர வெடி விபத்தில் தற்போது 4 பேர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகி உள்ளனது. இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# தியாகராயர் வழிநின்று தமிழ்நாட்டின் உயர்வுக்கு உழைப்போம்: முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிவு



சென்னை, ஏப்.28

நீதிக்கட்சியின் நிறுவனர்களில் ஒருவரான சர் பிட்டி தியாகராயரின் பிறந்தநாளை முன்னிட்டு, முதல்அமைச்சர்மு.க.ஸ்டாலின்தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

"கல்விக்கூடங்கள், தெருவிளக்குகள், குடிநீர் இணைப்பு, மதிய உணவுத் திட்டம் எனச் சென்னை மாநகரின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவர்.

நீதிக்கட்சியின் நிறுவனர்களுள் ஒருவராக இருந்து, தன்னைத் தேடி வந்த முதலமைச்சர் பொறுப்பை மறுத்த மாண்பாளராக உயர்ந்தவர். `எவருக்காகவும் தன் இயல்பை மாற்றிக்கொள்ளாத 'வெள்ளுடை வேந்தர்' எனப் பெயரும் பெற்றவர்.

இன்றைய நம் திராவிட மாடல் ஆட்சிக்கு நூறாண்டுகளுக்கு முன்பே வலுவான கொள்கை அடித்தளம் அமைத்த எம் தியாகராயர் வழிநின்று தமிழ் நாட்டின் உயர்வுக்கு உழைப்போம்!"

இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

## உரிமையை நிலைநாட்டும் திராவிட மாடல் அரசு: உதயநிதி ஸ்டாலின்



கோவை, ஏப்.28

கோவை ஆர்.எஸ்.புரத்தில் ரூ.10 கோடி மதிப்பில் 6,500 சதுர மீட்டர் பரப்பளவில் அமைய உள்ள புதிய ஆக்கி மைதான கட்டுமானப் பணிக்கு துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டினார். டர்ப் தளம், மின் கோபுர விளக்குகள், கழிவறை, பார்வையாளர் அரங்கம் உள்ளிட்டவை மைதானத்தில் அமைகின்றன.

அதன்பின்னர் விழாவில் துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:

பட்டா என்பது வெறும் ஆவணம் கிடையாது. உங்கள் இடத்தின் மீது உங்களுக்கு இருக்கக்கூடிய சட்டப்பூர்வ உரிமையாகும். உங்களுடைய உரிமையை நம்முடைய திராவிட மாடல் அரசு இன்று நிலை நாட்டியுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கு என்று நிறைய திட்டங்களை முதஅமைச்சர் மு.க.ஸ்டாலின் பார்த்து பார்த்து செய்து கொண்டிருக்கிறார்.

கடந்த வாரம் கூட இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் அறிவிக்காத, உள்ளாட்சி அமைப்புகளில் நியமன முறையில் மாற்றுத்திறனாளிகளை தேர்வு செய்வதற்கான சட்டமசோதாவை, சட்டசபையில் முதல்அமைச்சர் அறிவித்தார். இதன் மூலம் 15,000 மாற்றுத்திறனாளிகள் பயனடையவுள்ளனர். நம்முடைய முதல்அமைச்சர் அனைத்து தரப்பு மக்களையும் கவனத்தில் கொண்டு திட்டங்களை செயல்படுத்துவதால்தான், இன்றைக்கு இந்தியாவிலேயே 9.69% வளர்ச்சியோடு தமிழ்நாடு அனைத்து மாநிலங்களையும் விட முதலிடத்தில் உள்ளது.

மகளிர் சுய உதவிக்குழுக்களில் உள்ள சகோதரிகளின் நலன்களை கருத்தில் கொண்டு, இந்த ஆண்டு ரூ.37,000 கோடி அளவிற்கு வங்கிக்கடன் இணைப்புகளை வழங்க முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இதை இந்த அரசு கடன்தொகையாக பார்க்கவில்லை; உங்கள் உழைப்பின் மீது வைத்திருக்கக்கூடிய நம்பிக்கைத் தொகையாகதான் நாங்கள் பார்க்கிறோம்.

புதுமைப் பெண் திட்டம் மூலம் 3.5 லட்சம் மாணவிகளுக்கும், தமிழ்ப் புதல்வன் திட்டம் மூலம் 3.5 லட்சம் மாணவர்களுக்கும் மாதந்தோறும் ரூ.1000 கல்வி உதவித்தொகை கிடைக்கிறது. கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் நாட்டிற்கே முன்னோடியாக திகழ்கிறது. திராவிட மாடல் அரசு என்றாலே எல்லாருக்கும் எல்லாம் என்பதுதான் அர்த்தம். சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரின் தேவை அறிந்து செயல்படுவது தான் திராவிட மாடல் அரசு. இந்த அரசு என்றைக்கும் மக்களுக்கு பக்கபலமாக இருக்கும், நீங்களும் இந்த அரசுக்கு பக்கபலமாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

## முட்டுக்காட்டில் கலைஞர் பன்னாட்டு அரங்கம் அமைக்கும் பணி: அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு



சென்னை, ஏப்.28

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி, முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதியின் பெயரில், சென்னையில் புதிய உலகத் தரமான பன்னாட்டு அரங்கம் நிறுவப்படும் என 2.6.2023 அன்று முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். அந்த அறிவிப்பின் படி, அரசாணை (நிலை) எண்: 23, பொதுப்பணித் (ஓய் 1) துறை சார்பில் ரூ.525 கோடி மதிப்பீட்டில், செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் தாலுகா, முட்டுக்காட்டில் 'கலைஞர் பன்னாட்டு மாநாட்டு அரங்கம் மையம்' கட்ட தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இதற்காக, அரசாணை (நிலை) எண்: 20, பொதுப்பணித் (ஓய் 1) துறை, நாள்: 5.8.2024 அன்று, செங்கல்பட்டு மாவட்டம், முட்டுக்காடு கிராமம், கிழக்குக் கடற்கரைச் சாலையில் 37.99 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி நில மாற்றம் செய்ய பொதுப்பணித் துறை ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்த நிலத்தில் புதிய கட்டிடம் உருவாக்கப்பட உள்ளது.

மேலும், ரூ.525 கோடி மதிப்பீட்டிலான இந்த திட்டத்தின் கீழ், சுமார்5,000இருக்கைகள்கொண்ட மாநாட்டுக் கூடம், 10,000 பேர் பார்வையிடும் வசதி கொண்ட கண்காட்சி அரங்கம், கூட்ட அரங்குகளுக்கான அரங்கம் ஆகியன அமைய உள்ளன. இந்த பன்னாட்டு அரங்கத்தில் திறந்தவெளி அரங்கம், உணவு விடுதிகள், சுமார் 10,000 வாகனங்களை நிறுத்தும் அளவுக்கு வாகன நிறுத்த வசதிகள், சாலை வசதி, நுழைவு வாயில், சுற்றுச்சூழல் வசதி என அனைத்து வசதிகளுடன் உலகத் தரத்தில் அமைக்கப்பட உள்ளது.

இப்பணியினை 2025ம் ஆண்டு இறுதியில் அல்லது 2026ம் ஆண்டு தொடக்கத்தில் முடிக்க பொதுப்பணித்துறை திட்டமிட்டுள்ளது. தற்போதைய பணிகளின் நிலை தொடர்பாகவும் கூடுதலாக மேற்கொள்ளப்பட்ட வேண்டிய பணிகள் குறித்தும் பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைதுறைஅமைச்சர்எ.வ.வேலு பொதுப்பணித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, அவர்களுடன் இன்று நேரில் ஆய்வு மேற்கொண்டு அதிகாரிகளிடம் பணிகளின் நிலைகள் குறித்து விவாதித்தார். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ராமேஸ்வரம் கோவிலில் ரூ.207 கோடி செலவில் திட்டப்பணிகள் அமைச்சர் சேகர் பாபு தகவல்



ராமநாதபுரம், ஏப்.28

பக்தர்களின் வசதிக்காக போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த ஒரு விரைவு திட்டத்தை ஏற்படுத்த உள்ளதாக அமைச்சர் சேகர் பாபு தெரிவித்தார்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பிரசித்தி பெற்ற ராமநாதசாமி கோவிலில் அமைச்சர் சேகர்பாபு, தனது குடும்பத்துடன் சாமி தரிசனம் செய்தார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசிய போது அவர் கூறியதாவது;

"ராமேஸ்வரம் கோவிலில் ரூ.207 கோடி செலவில் 37 திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இந்த பணிகள் நிறைவடையும்போது ராமநாதசாமி திருக்கோவிலுக்கு வருகின்ற பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் முழுமை பெறும். மேலும் பக்தர்களின் வசதிக்காக போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த ஒரு விரைவு திட்டத்தை ஏற்படுத்த உள்ளோம். இது தொடர்பாக அடுத்த மாதம் ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளது."

இவ்வாறு அமைச்சர் சேகர் பாபு தெரிவித்தார்.

## அடிமை ஆட்சியை எதிர்க்க இங்கே புரட்சி உருவாகிக் கொண்டிருக்கிறது ஆதவ் அர்ஜூனா

கோயம்புத்தூர் ஏப்.28

கோவை தனியார் கல்லூரியில் நடந்த இந்த தமிழக வெற்றிக் கழக பூத் கமிட்டி கூட்டத்தில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா உரையாற்றினார்.

அப்போது பேசிய அவர், "வக்பு வாரிய சட்டத்திற்கு முதலில் போராட்டத்தை அறிவித்தது தவெக தான். வக்பு வாரிய விவகாரத்தில் விஜய் சுப்ரீம்கோர்ட்டை நம்பினார். தமிழகம் முழுக்க போராட்டத்தை தவெக நடத்தியது. ஒரு சட்டம் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேறி, அதற்கு ஜனாதிபதி ஒப்புதல் கொடுத்துவிட்டார் என்றால் அதற்கு மாநிலச் சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றி அழுத்தம் தர முடியாது.

தமிழக அரசு வக்பு சட்டத்திற்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றியது உண்மை தான். அதை வரவேற்கிறோம். ஆனால், அதை வைத்து அழுத்தம் தர முடியாது. கேரள அரசு வக்பு வாரிய விவகாரத்தில் தீர்மானம் நிறைவேற்றியது மட்டுமின்றி, வக்பு விவகாரத்தில் சுப்ரீம்கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தது. சுப்ரீம்கோர்ட்டு வழக்கில் தமிழக அரசு தன்னை இணைத்துக் கொள்ளாதது ஏன்..?

மக்கள் பாதுகாப்பை உறுதி செய்யப் பாதுகாப்பைக் கொடுங்கள் அதுவே போதும். தேர்தல் நடக்கும்போது மூத்த நிர்வாகிகளைக் காட்டிலும் பூத் கமிட்டி உறுப்பினர்களுக்கே அதிக பவர் இருக்கிறது. வாக்குப்பதிவின்போது கடைசி இரண்டு மணி நேரம் வாக்களிக்காதவர்களின் லிஸ்ட்டை வைத்து கள்ள ஓட்டுப் போட வாய்ப்பு இருக்கிறது. அதை பூத் கமிட்டி ஏஜெண்டுகள் கண்காணிக்க வேண்டும்.

நீங்கள் அது குறித்து குரல் எழுப்பினால்.. உடனே தலைமையின் ஆதரவு வந்துவிடும். அதன் பிறகு அவர்களால் வாக்குப்பெட்டிக்குச் சீல் வைக்க முடியாது. அதேபோல வாக்கு எண்ணிக்கை நடக்கும்போதும் கவனமாகக் கண்காணிக்க வேண்டும். வாக்கு எண்ணிக்கை முறையாக நடைபெறுவதை பூத் கமிட்டி ஏஜெண்டுகள் உறுதி செய்ய வேண்டும். அதுவே பிரதானமானது. இத்தனை காலம் தவெகவுக்கு கட்சி கட்டமைப்பு இல்லை என்ற விமர்சனங்கள் இருந்தது. இப்போது எங்கள் கட்டமைப்பை இரண்டு நாட்கள் கோவையில் பார்த்து இருப்பார்கள்.

ஊழலாட்சியை, அடிமை ஆட்சியை எதிர்க்க இங்கே புரட்சி உருவாகிக்கொண்டிருக்கிறது. இது மக்களுடைய செல்வாக்கு, இந்த இளைஞர்களை வைத்து என்ன செய்யப் போகிறார்கள் என பேசுகிறார்கள். 2026 தமிழக வெற்றிக் கழகத்திற்கான நாள்.. 2 நாட்களாக கோவை முடங்கிவிட்டது.. வரலாறு உருவாகும் போது பழைய காலத்தை பற்றி பேசிக் கொண்டிருப்பார்கள்" என்று அவர் கூறினார்.



தினகனி




# திருவாரூர்: டிரான்ஸ்பார்மரில் இருந்து தவறி விழுந்த மின்வாரிய ஊழியர் உயிரிழப்பு

திருவாரூர், ஏப்.28

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அருகே உள்ள தெற்கு தென்பரை பகுதியைச் சேர்ந்தவர் மோகனசுந்தரம் (57 வயது). இவர், மன்னார்குடி மின்வாரிய அலுவலகத்தில் மின்பாதை ஆய்வாளராக பணிபுரிந்து வந்தார். நேற்று முன்தினம் இரவு மன்னார்குடி காளவாய்க்கரை அருகில் உள்ள டிரான்ஸ்பார்மரில் பழுது காரணமாக மின் தடை ஏற்பட்டது. இது குறித்து தகவல் அறிந்த மோகனசுந்தரம் அந்த பகுதிக்கு சென்று பழுது நீக்கம் செய்ய டிரான்ஸ் பார்மர்மீது ஏறி சரிசெய்து கொண்டிருந்தார்.

அப்போது எதிர்பாராத விதமாக



டிரான்ஸ்பார்மரில் இருந்து மோகனசுந்தரம் தவறி கீழே விழுந்தார். இதில் படுகாயம் அடைந்த அவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார். இது குறித்து தகவல் அறிந்த சம்பவ இடத்துக்கு சென்ற போலீசார், மோகனசுந்தரம் உடலை கைப்பற்றி மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பெண்களை அச்சுறுத்தும் நபருக்கு 3 ஆண்டுகள் வரை சிறை தண்டனை





திருப்பூர், ஏப்.28

தமிழ்நாடு பெண்கள் துன்புறுத்துதல் தடை (திருத்தச்) சட்டம் 2025ன் படி 3 ஆண்டுகள் வரை பாதுகாப்பு ஆணை பெறப்பட்டது.

திருப்பூர் மாநகரக் காவல்துறை சார்பில் பெண்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றன. அதன்படி தமிழ்நாடு அரசால் அண்மையில் நிறைவேற்றப்பட்ட பெண்களுக்கு எதிரான சித்திரவதைத் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 7C படி நல்லூர் காவல் நிலையத்தில் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் இதுவரை 8 குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு எதிராக அவர்கள் வழக்கின் புகார் அளித்தப் பெண்களை எந்த வகையிலும் தொடர்பு கொள்ளக் கூடாது என்பதுடன் அவர்களை எந்தவொரு வகையிலும் அச்சுறுத்தும் நோக்கில் செயல்படக்கூடாது என்றும் தவறும் பட்சத்தில் 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும் மற்றும் ஒரு லட்சம் ரூபாய் அபராதமும் விதிக்க நேரிடும் என்று வட்ட நிர்வாக நீதிபதியால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# சென்னைஐதராபாத் ஐ.பி.எல். போட்டிக்கு கள்ளச்சந்தையில் டிக்கெட் விற்பனை செய்த 4 பேர் கைது



சென்னை, ஏப்.28

சென்னை சேப்பாக்கம் எம்.ஏ. சிதம்பரம் மைதானத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிகளுக்கு இடையிலான ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

அப்போது மைதானத்தை சுற்றி உள்ள இடங்களில் இந்த போட்டிக்கானடிக்கெட்டுகளை கள்ளச்சந்தையில் கூடுதல் விலைக்கு விற்பனை செய்ததாகபுரசைவாக்கம் பகுதியை சேர்ந்த டில்லி பாபு (வயது 33), புதுப்பேட்டை பகுதியை சேர்ந்த இம்ரான் (32), அண்ணாநகரை சேர்ந்த கார்த்திக் (31), காரனோடையை சேர்ந்த சுரேந்தர் (23) ஆகிய 4 பேரை திருவல்லிக்கேணிபோலீசார் கைது செய்தனர். அவர்கள் விற்பனைக்கு வைத்திருந்த 7 டிக்கெட்டுகளை போலீசார் பறிமுதல் செய்தனர்.

# புதுக்கோட்டை புதிய டவுன் பஸ்கள் நிறுத்துமிடத்தில் நிழற்பந்தல் அமைப்பு



புதுக்கோட்டை, ஏப்.28

புதுக்கோட்டை புதிய பஸ் நிலையத்தில் கட்டிடங்கள் சேதமடைந்த நிலையில் அதனை இடித்து விட்டு புதிதாக கட்டப்பட உள்ளது. சேதமடைந்த கட்டிடங்கள் முழுவதுமாக இடிக்கப்பட்ட நிலையில் அந்த இடம் மைதானம் போல காட்சியளிக்கிறது. பஸ் நிலையம் அருகில் உள்ள அரசு போக்குவரத்து கழக பணிமனை வளாகத்தில் தற்காலிக பஸ் நிலையத்தில் இருந்து புறநகர்பஸ்கள் இயக்கப்படுகிறது. டவுன் பஸ்கள் வழக்கம் போல பஸ் நிறுத்தத்தில் இருந்து இயக்கப்படுகிறது.

இந்த நிலையில் கட்டிடங்கள் முழுமையாக இடித்து அகற்றப்பட்டு விட்டதால் டவுன் பஸ்கள் நிறுத்துமிடத்தில் நிழற்குடை வசதி இல்லாமல் இருந்தது. இதனால் பொதுமக்கள் வெயில், மழையில் அவதி அடைந்து வந்தனர். இது தொடர்பாக தினத்தந்தியில் நேற்று முன்தினம் செய்தி வெளியானது. இதன் எதிரொலியாக மாநகராட்சி நிர்வாகத்தினர் நேற்று நடவடிக்கை எடுத்தனர்.

புதுக்கோட்டை புதிய பஸ் நிலையத்தில் டவுன் பஸ்கள்நிறுத்துமிடத்தில் பசுமை பந்தல் என அழைக்கப்படும் நிழற்பந்தல் நேற்று அமைக்கப்பட்டது. நீண்ட வலையான இதனை பஸ்கள் நிறுத்துமிடம் எதிரே, அதாவது இரு சக்கர வாகன நிறுத்துமிட பக்கவாட்டு சுவர் அருகே கம்புகள் கட்டி அதன் மேல் நீண்ட வலையை மேற்கூரையை போல தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு பொதுமக்கள் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ளது. நிழற்குடை கோரிக்கையை செய்தியை வெளியிட்ட 'தினத்தந்தி'க்கும், நிழற்பந்தல் அமைத்து கொடுத்த மாநகராட்சி நிர்வாகத்தினருக்கும் பொதுமக்கள் நன்றியும், பாராட்டுகளும் தெரிவித்தனர்.

அதேநேரத்தில் வலை போல உள்ள இந்த பந்தலில் நேற்று மழை பெய்த போது அதில் இருந்து தண்ணீர் வடிந்தது. இதனால் பொதுமக்கள் நிழற்பந்தலை பயன்படுத்த முடியவில்லை. மேலும் வெயில் அடிக்கும் போது வெயிலின் தாக்கம் சற்று அதில் இருந்தது. இதனால் அந்த வலைக்கு பதிலாக மேற்கூரை போன்று ஷெட்கள் அமைக்க மாநகராட்சி நிர்'வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சென்னை: அடுக்குமாடி குடியிருப்பின் 6வது மாடியில் இருந்து தவறி விழுந்த 4½ வயது சிறுவன் பலி




சென்னை, ஏப்.28

சென்னை தியாகராயநகர், அபிபுல்லா சாலை, 3வது குறுக்கு தெருவைச் சேர்ந்தவர் திலீப் (வயது 38). இவரது மனைவி சுவாதி. இவர்களுக்கு ஒரு மகள் இருக்கிறாள். நான்கரை வயதில் துருவன் என்ற மகனும் இருந்தான். வேலூரில் வசித்து வரும் சுவாதியின் பெற்றோர், கோடைவிடுமுறைக்காக கோயம்பேடு 100 அடி சாலையில் அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள தங்களது வீட்டுக்கு வந்திருந்தனர். தனது பெற்றோரை பார்ப்பதற்காக சுவாதி, தனது மகன் மற்றும் மகளை அழைத்துக் கொண்டு கோயம்பேடு வந்தார்.

அடுக்குமாடி குடியிருப்பின் 6வது மாடியில் உள்ள பெற்றோர் வீட்டில் சுவாதி உள்பட அனைவரும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். அப்போது வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த துருவன், ஜன்னல் வழியாக 6வது மாடியில் இருந்து தவறி கீழே விழுந்துவிட்டான். இதில் படுகாயம் அடைந்த அவன், ரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடினான்.

சிறுவனை மீட்டு வடபழனியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றனர். அங்கு பரிசோதனை செய்த மருத்துவர்கள், சிறுவன் துருவன் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இதுபற்றி தகவல்அறிந்துவந்தகோயம்பேடு போலீசார், சிறுவனின் உடலை பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

# சென்னை: ஓடுபாதையில் விமானத்தின் டயர் வெடித்ததால் பரபரப்பு





சென்னை, ஏப்.28

சென்னை மீனம்பாக்கம் சர்வதேச விமான நிலையத்தில் ஓடுபாதையில் சென்ற விமானத்தின் டயர் வெடித்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. பயணிகள் மற்றும் விமான ஊழியர்கள் உள்பட மொத்தம் 166 பேருடன் மும்பைக்கு புறப்பட்ட விமானம், ஓடுபாதைக்கு சென்ற போது திடீரென விமானத்தின் பின்பக்க டயர் வெடித்தது.

அப்போது விமானம் பயங்கரமாக குலுங்கியது. இதனால் விமானத்தில் இருந்த பயணிகள் பீதியடைந்து கூச்சலிட்டனர். இதற்கிடையில் சாதுரியமாக செயல்பட்ட விமானி, விமானத்தை உடனடியாக ஓடுபாதை அருகே நிறுத்தியதால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது. இந்த சம்பவத்தில் அதிர்ஷ்டவசமாக ஊழியர்கள் மற்றும் பயணிகள் உள்பட 166 பேர் காயமின்றி உயிர் தப்பினர்.

# தூத்துக்குடியில் விற்பனைக்காக வைத்திருந்த 11 கிலோ கஞ்சா பறிமுதல் 3 பேர் கைது



தூத்துக்குடி ஏப்.28

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய போலீசாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் உத்தரவின் படி, கோவில்பட்டி உட்கோட்ட டி.எஸ்.பி. ஜெகநாதன் மேற்பார்வையில், கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய இன்ஸ்பெக்டர் ஜின்னா பீர்முகமது தலைமையிலான போலீசார் நேற்று (25.04.2025) புதுகிராமம் சுடுகாட்டு பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது அங்கு இரண்டு இரு சக்கர வாகனங்களில் சந்தேகப்படும்படி நின்று கொண்டிருந்தவர்களை பிடித்து போலீசார் விசாரணை செய்தனர். அதில் அவர்கள் நாலாட்டின்புதூர், கோபாலபுரம் நடுத்தெருவை சேர்ந்த முருகன் மகன் கருப்பசாமி (வயது 33), கோவில்பட்டி மந்திதோப்புரோடு பகுதியைச் சேர்ந்த குருசாமி மகன் ராஜசேகரபாண்டியன் (32) மற்றும் ஒரு இளஞ்சிறார் ஆகியோர் என்பதும் அவர்கள் விற்பனைக்காக கஞ்சா வைத்திருந்ததும் தெரியவந்தது.

இதனையடுத்து மேற்சொன்ன போலீசார் 2 பேரை கைது செய்ததோடு, இளஞ்சிறாரை கையகப்படுத்தி திருநெல்வேலி அரசு கூர்நோக்கு இல்லத்தில் ஒப்படைத்தனர். அவர்களிடமிருந்த 11 கிலோ 150 கிராம் கஞ்சா, ரொக்கப் பணம் ரூ.1,400 மற்றும் 2 இருசக்கர வாகனங்களையும் பறிமுதல் செய்தனர். மேலும் இது குறித்து கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழகத்தில் லைட்டர் விற்பனையை தடை செய்ய நடவடிக்கை எடுக்க அமைச்சர் உறுதி





சென்னை ஏப்.28

தமிழக சட்டப்பேரவையில், அ.தி.மு.க. எம்.எல்.ஏ. கடம்பூர் ராஜூ கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்து பேசினார். அப்போது அவர் கூறும்போது, "தென்மாவட்டங்களில் விவசாயத்துக்கு அடுத்த நிலையில், தீப்பெட்டி தொழில் ஏழை பெண் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தி தரும் தொழிலாக உள்ளது. அந்த தொழிலுக்கு லைட்டர் விற்பனை பெரும் சவாலாக உள்ளது. தீப்பெட்டி தொழிலாளர் சங்கம் சார்பில் மனு அளித்ததின் பேரில், முதல்வர் ஸ்டாலினும் மத்திய அரசுக்கு கடிதம் எழுதினார்.

ஆனால் உதிரி பாகங்களுக்கு மட்டுமே தடை விதிக்கப்பட்டது. முற்றிலுமாக தடை செய்யப்படவில்லை. அந்தமான் அரசு, சுற்றுச்சூழல் துறையின் கீழ் லைட்டர் விற்பனைக்கு தடை விதித்துள்ளது. அது போல் சுற்றுச்சூழல் துறை சார்பில் தமிழகத்தில் லைட்டரை தடை செய்ய வேண்டும்," என்று கூறினார்.

இதற்கு பதில் அளித்து பேசிய நிதி மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, "லைட்டர் விற்பனையால் தீப்பெட்டி தொழிலாளர்களுக்கு பிரச்சினை இருக்கிறது என்பதை அரசு அறியும். தமிழகத்தில் ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் 14 வகையான பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த லைட்டர்களும், பிளாஸ்டிக்கால் செய்யப்பட்டு, ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியக்கூடியவைதான்.

இதன்கீழ் லைட்டர் விற்பனையை தடை செய்வது குறித்து மாசுக் கட்டுப்பாடு வாரியம் சார்பில் சுற்றுச்சூழல் துறைக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந்த பரிந்துரை, அரசு பரிசீலனையில் உள்ளது. இது குறித்து முதல்வரின் கவனத்துக்கு கொண்டு சென்று விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று கூறினார்.

# 2வது நாளாக கோவையில் விஜய்.. ஹோட்டல் முன்பாக குவிந்த தவெக தொண்டர்கள்: மிரள விடும் பவுன்சர்கள் படை



கோவை

தவெக தலைவர் விஜய் நேற்று கோவையில் இரண்டாவது நாளாக கருத்தரங்கில் பங்கேற்கிறார். இதையொட்டி விஜய் தங்கியுள்ள ஹோட்டல் முன்பாக ஏராளமான தவெக தொண்டர்கள், விஜய் ரசிகர்கள் குவிந்துள்ளனர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு நிலவுகிறது.

தமிழக வெற்றிக் கழகத்தின் வாக்குச்சாவடி முகவர்களு க்கான கருத்தரங்கு நடத்தும் பணியில் தவெக தலைவர் விஜய் ஈடுபட்டு வருகிறார். முதல்கட்டமாக கோவை, நீலகிரி, திருப்பூர், ஈரோடு, கரூர், நாமக்கல், சேலம் ஆகிய 7 மாவட்டங்களை சேர்ந்த முகவர்களுக்கான கருத்தரங்கு நடத்தப்பட்டு வருகிறது.

கோவை மண்டல அளவிலான வாக்குச்சாவடி முகவர்களுக்கான 2 நாள் கருத்தரங்கு நேற்று கோவை அருகே குரும்பபாளையத்தில் உள்ள தனியார் கல்லூரி அரங்கில்தொடங்கியது. இந்தக் கருத்தரங்கில் கட்சியின் தலைவர் விஜய் பங்கேற்றார்.

மேலும், விமான நிலையத்தில் இருந்து தான் தங்கும் விடுதிக்கு திறந்த வேனில் சென்றார் விஜய். விஜய் வாகனத்தை பின் தொடர்ந்து வந்த தவெகவினர், சாலையில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் வாகனங்களை ஓட்டிச் சென்றுள்ளனர். இதனால் போக்குவரத்தும் கடுமையாக பாதிக்கப்பட்டு, பொதுமக்கள் வெயிலில் காத்திருக்கும் நிலை ஏற்பட்டது. இதுதொடர்பாக தவெகவினர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று இரண்டாவது நாளாக பூத் கமிட்டி கருத்தரங்கு நடக்கும் நிலையில், விஜய் நேற்றும் பங்கேற்கிறார். இதையொட்டி, கருத்தரங்கு நடைபெறும் கல்லூரி பகுதியில் கடும் வெயிலிலும் காலை முதலே குவிந்து வருகிறார்கள் தவெக தொண்டர்கள். அதோடு, விஜய் தங்கி உள்ள ஹோட்டல் பகுதியிலும் தவெக தொண்டர்கள், விஜய் ரசிகர்கள் சூழ்ந்துள்ளனர்.

வாகனங்கள் வெளியே செல்லும் வழியில் நின்று இடையூறு ஏற்படுத்த வேண்டாம் என விடுதி ஊழியர்களும் காவல்துறையினரும் அறிவுரை வழங்கி வருகின்றனர். எனினும் வழி விடாமல் தொண்டர்கள் முழக்கமிட்டு வருகின்றனர். இந்நிலையில், அங்கு கருப்பு உடை அணிந்த பவுன்சர்கள் ஏராளமானோர் குவிக்கப்பட்டுள்ளனர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு நிலவி வருகிறது.

# பழனி முருகன் கோவிலில் உண்டியல் காணிக்கை மூலம் ரூ. 5.42 கோடி வருவாய்



திண்டுக்கல், ஏப்.28

திண்டுக்கல் மாவட்டம் பழனி முருகன் கோவிலுக்கு தரிசனம் செய்ய தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகின்றனர். வருகை தரும் பக்தர்கள் அலகு குத்தி, முடிக்காணிக்கை செலுத்தி நேர்த்திக்கடனை நிறைவேற்றுகின்றனர். மேலும், கோவில் உண்டியலில் பணம், தங்கம், வெள்ளி பொருட்களை காணிக்கையாக செலுத்துகின்றனர்.

இந்த உண்டியல்கள் நிரம்பியவுடன் கோவில் நிர்வாகம் சார்பில் எண்ணப்பட்டு வருகிறது.

அதன்படி, பழனி முருகன் கோவிலில் உண்டியல் காணிக்கை எண்ணும் பணி கடந்த 2 நாட்களாக நடைபெற்றது. காணிக்கை எண்ணும் பணியில் கோவில் அலுவலர்கள், பழனி பகுதி வங்கி அலுவலர்கள், பழனியாண்டவர் கலைக்கல்லூரி பணியாளர்கள், மாணவமாணவிகள் என பலர் ஈடுபட்டனர்.

இந்நிலையில், உண்டியல் காணிக்கையில் ரூ. 5 கோடியே 42 லட்சத்து 62 ஆயிரத்து 88 ரூபாயும், தங்கம் 1 ஆயிரத்து 131 கிராம், வெள்ளி 21 கிலோ 324 கிராம், 1 ஆயிரத்து 610 வெளிநாட்டு கரன்சி நோட்டுகள் கிடைத்துள்ளதாக பழனி முருகன் கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# கன்னியாகுமரி: கோவில் திருவிழாவில் யானைக்கு மதம் பிடித்ததால் பரபரப்பு



கன்னியாகுமரி, ஏப்.28

கன்னியாகுமரி மாவட்டம் தமிழகேரள எல்லையை அடுத்த பொழியூர் மஹாதேவர் கோவில் திருவிழா விமரிசையாக நடைபெற்றது. ஆறாட்டு ஊர்வலத்திற்காக பாறசாலை பகுதியை சேர்ந்த சிவசங்கரன்என்றயானை அழைத்து வரப்பட்டது. ஊர்வலம் முடிந்து கோவிலை சுற்றி வலம் வந்தபோது திடீரென யானைக்கு மதம் பிடித்தது.

இதனால் அச்சமடைந்த பக்தர்கள் நாலாபுறமும் பதறியடித்து ஓடினர். கோவிலைச் சுற்றி நடப்பட்டிருந்த மரங்கள், மதில் சுவர் மற்றும் கூரை ஓடு ஆகியவற்றை யானை இடித்து சேதப்படுத்தியது. சுமார் 4 மணி நேரம் போராடி யானையை பாகன்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இந்த சம்பவத்தில் அதிர்ஷ்டவசமாக உயிர்சேதம் ஏற்படவில்லை.

# நெல்லை-செங்கோட்டை பாசஞ்சர் ரெயிலில் கூடுதலாக 4 பெட்டிகள் இணைப்பு

நெல்லை, ஏப்.28

நெல்லை செங்கோட்டை இடையே தினசரி பாசஞ்சர் ரெயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த ரெயிலின் மூலம் ஆயிரக்கணக்கானோர் பயணம் செய்து வருகின்றனர். குறிப்பாக, காலை மற்றும் மாலை வேளைகளில் இயக்கப்படும் இந்த ரெயிலில் பள்ளி, கல்லூரி மாணவர்கள், வேலை நிமித்தமாக செல்பவர்கள் அதிகம் பேர் பயணம் செய்வதனால், அந்த சமயங்களில் கூட்டம் வழக்கத்தை விட அதிகரித்து காணப்படும்.

பாசஞ்சர் ரெயில்கள் 12 பெட்டிகளுடன் மட்டுமே இயங்குவதால் பயணிகள் ரெயிலில் இடம் கிடைக்காமல் காலை, மாலை நேரங்களில் நின்று கொண்டும், வாசலில் தொங்கி கொண்டும் பயணம் செய்கிறார்கள். எனவே பெட்டிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று பயணிகள் மற்றும் பயணிகள் நலச்சங்கத்தினர் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர்.

சமீபத்தில் ராபர்ட் புரூஸ் எம்பி. நெல்லையில் இருந்து மாலை 6.20 மணிக்கு புறப்பட்ட செங்கோட்டை ரெயிலில் பயணம் செய்து பயணிகளின் சிரமங்களை பார்வையிட்டு, குறைகளை கேட்டார். மேலும் மதுரை ரெயில்வே கோட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பொது மேலாளரை சந்தித்து நெல்லை செங்கோட்டை பாசஞ்சர் ரெயிலில் கூடுதல் பெட்டிகள் இணைக்குமாறு வலியுறுத்தினார்.

இந்த நிலையில் வருகிற மே மாதம் 3ந்தேதி முதல் நெல்லை செங்கோட்டை பாசஞ்சர் ரெயிலில் கூடுதலாக 4 பெட்டிகள் இணைப்பதாக தென்னக ரெயில்வே அறிவித்து உள்ளது. அதன்படி நெல்லை சந்திப்பில் இருந்து காலை 6.50 மணி மற்றும் மதியம் 1.40 மணிக்கு புறப்படும் செங்கோட்டை பாசஞ்சர் ரெயில்களில் கூடுதல் பெட்டிகள் இணைக்கப்படுகிறது.

மறுமார்க்கத்தில் செங்கோட்டையில் இருந்து காலை 10.05 மணி மற்றும் மாலை 6.05 மணிக்கு புறப்படும் நெல்லை பாசஞ்சர் ரெயில்களில் கூடுதல் பெட்டிகள் இணைக்கப்படுகிறது. இதில் 14 பொது பெட்டிகள், கார்டுடன் இணைந்த 2 பெட்டிகள் என மொத்தம் 16 பெட்டிகள் இணைக்கப்பட்டிருக்கும்.

அதே நேரத்தில் நெல்லைசெங்கோட்டை இடையே இயக்கப்படும் மற்ற பாசஞ்சர் ரெயில்களிலும் கூடுதல் பெட்டிகள் இணைக்கப்பட வேண்டும் என்று பயணிகள் வலியுறுத்தி உள்ளனர்.

# 10ம் வகுப்பு மாணவிக்கு பாலியல் தொல்லை: வாலிபர் கைது

தேனி, ஏப்.28

தேனி மாவட்டம் சின்னமனூர் புதுகிணறு தெருவை சேர்ந்தவர் மச்சப்பாண்டி (வயது 25). இவர், 10ம் வகுப்பு மாணவிக்கு பாலியல் தொல்லை அளித்ததாக கூறப்படுகிறது. இதுகுறித்து மாணவியின் பெற்றோர், சின்னமனூர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தனர். இந்த புகார், போடி அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்துக்கு மாற்றப்பட்டது. இதை த்தொடர்ந்து போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து மச்சபாண்டியை கைது செய்தார். மேலும் இதுகுறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# உல்லாசத்துக்கு இடையூறு: பெண் குழந்தை கொடூரக்கொலை; தாய்3 வாலிபர்கள் அதிரடி கைது



திசையன்விளை, ஏப்.28

திசையன்விளை அருகே பெண் குழந்தை மர்மமான முறையில் இறந்த வழக்கில் துப்பு துலங்கியது. உல்லாசத்துக்கு இடையூறாக இருந்ததால் குழந்தையை கொடூரமாக கொன்றதாக தாய்3 வாலிபர்களை போலீசார் அதிரடியாக கைது செய்தனர்.

நெல்லை மாவட்டம் திசையன்விளை அருகே உள்ள மகாதேவன்குளத்தைச் சேர்ந்தவர் சரத். இவரது சொந்த ஊர் இட்டமொழி அருகே உள்ள அழகப்பபுரம். இவர் கோவையில் ஒரு கடையில் வேலை செய்து வருகிறார்.

இவருடைய மனைவி பிருந்தா (வயது 24). வெவ்வேறு சமுதாயத்தைச் சேர்ந்த இவர்கள் காதலித்து கலப்பு திருமணம் செய்தனர். இவர்களுக்கு தர்ஷினி என்ற 2½ வயது பெண் குழந்தை உண்டு.

கடந்த 23ந் தேதி இரவு பிருந்தா தனது குழந்தையை தூக்கிக்கொண்டு பக்கத்து ஊரான தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் தாலுகா நடுவக்குறிச்சியில் உள்ள தனது தாய் வீட்டிற்கு சென்றார். அங்கு குழந்தை கட்டிலில் இருந்து கீழே விழுந்து விட்டதாக கூறி தூங்க வைத்துள்ளார்.

நேற்று முன்தினம் காலையில் வெகுநேரம் ஆகியும் குழந்தை கண் விழிக்கவில்லை. இதனால் குழந்தையை பிருந்தாவும், அவரது தாயாரும் சிகிச்சைக்காக திசையன்விளை அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். அங்கு பரிசோதனை செய்த டாக்டர், குழந்தை தர்ஷினி ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தார். மேலும், குழந்தையின் உதட்டில் ரத்தக்காயமும் இருந்தது.

எனவே, சந்தேகமடைந்த உறவினர்கள் இது குறித்து திசையன்விளை போலீஸ் நிலையத்துக்கு தகவல் அளித்தனர். போலீசார் விரைந்து சென்று குழந்தையின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக நெல்லை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இந்த மர்ம சாவு குறித்து தாய் பிருந்தாவிடம் தீவிர விசாரணை மேற்கொண்டனர்.

இந்த விசாரணையில் துப்பு துலங்கியது. அதாவது, தாயின் உல்லாசத்துக்கு இடையூறாக இருந்ததால் குழந்தை தர்ஷினி கொடூரமாக கொலை செய்யப்பட்ட அதிர்ச்சி தகவல் வெளியானது. பிருந்தாவிடம் நடத்திய விசாரணையில் கிடைத்த பரபரப்பு தகவல்கள் வருமாறு:

பிருந்தாவுக்கும், இட்டமொழி அருகே உள்ள துவரம்பாடு ஊரைச் சேர்ந்த சுயம்புத்துரை மகன் லிங்கசெல்வனுக்கும் (29) பழக்கம் இருந்துள்ளது. இது நாளடைவில் கள்ளக்காதலாக மாறியது. திருமணமான லிங்கசெல்வன், மன்னார்புரத்தில் இருந்து திசையன்விளை செல்லும் சாலையில் உள்ள வாழைத்தோட்டம் மெயின்ரோட்டில் ஐஸ்கிரீம் கடை வைத்துள்ளார்.

கடந்த 23ந் தேதி இரவு லிங்கசெல்வன் மற்றும் அவருடைய நண்பர்களான துவரம்பாட்டைச் சேர்ந்த சுடலை மகன் முத்துச்சுடர் (28), லிங்கம் மகன் பெஞ்சமின் (25) ஆகியோர் மோட்டார் சைக்கிள்களில் பிருந்தாவின் வீட்டிற்கு சென்றனர். அங்கிருந்த பிருந்தாவையும், குழந்தை தர்ஷினியையும் மோட்டார் சைக்கிளில் அழைத்துக்கொண்டு வாழைத்தோட்டம் பகுதியில் உள்ள குளம் பகுதிக்கு சென்றனர். அங்கு மது அருந்திவிட்டு பிருந்தாவுடன் 3 பேரும் உல்லாசமாக இருந்தனர்.

அப்போது குழந்தை தண்ணீர் வேண்டும் என்று கேட்டுள்ளது. போதையில் இருந்த வாலிபர்கள், குழந்தை என்றும் பாராமல் குளிர்பானத்தில் கலக்கப்பட்ட மதுவை கொடுத்தனர். அதை குடித்த குழந்தை அழுதுள்ளது.

எனவே, தங்கள் உல்லாசத்துக்கு இடையூறாக இருக்குமோ என்ற ஆத்திரத்தில் குழந்தையின் வாயை பொத்தி அவர்கள் தாக்கியதாக கூறப்படுகிறது. இதில் மயக்கமடைந்த குழந்தையை 2 வாலிபர்கள் தூக்கிக்கொண்டு வந்து ஐஸ்கிரீம் கடையில் படுக்க வைத்துவிட்டு மீண்டும் பிருந்தாவுடன் உல்லாசமாக இருந்துள்ளனர்.

பின்னர் நள்ளிரவில் ஐஸ்கிரீம் கடைக்கு வந்து மூச்சுப்பேச்சு இல்லாமல் கிடந்த குழந்தையை தூக்கி பிருந்தாவிடம் கொடுத்துவிட்டு அவர்கள் 3 பேரும் சென்றுவிட்டனர். என்ன செய்வதென்று தெரியாமல் தாய் வீட்டிற்கு சென்ற பிருந்தா, தனது குழந்தை கட்டிலில் இருந்து கீழே விழுந்து மயங்கி விட்டதாக கூறி நாடகமாடியது விசாரணையில் தெரிய வந்ததாக போலீசார் தெரிவித்தனர்.

இந்த கொடூரக் கொலை குறித்து வழக்குப்பதிவு செய்து பிருந்தா, லிங்கசெல்வன், முத்துச்சுடர், பெஞ்சமின் ஆகிய 4 பேரையும் போலீசார் அதிரடியாக கைது செய்தனர். தாயின் உல்லாசத்துக்கு இடையூறாக இருந்த பெண் குழந்தை கொடூரமாக கொலை செய்யப்பட்ட சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# பெண் பத்திரிகையாளர்கள் குறித்த சர்ச்சை கருத்து: எஸ்.வி.சேகர் சரணடைய காலக்கெடு நீட்டிப்பு



புதுடெல்லி, ஏப்.28

பிரபல நடிகர் எஸ்.வி.சேகர், பெண் பத்திரிகையாளர்கள் குறித்து கடந்த 2018ம் ஆண்டு தனது சமூக வலைத்தளத்தில் அவதூறு கருத்து ஒன்றை பதிவிட்டார்.

இது தொடர்பான புகாரின் அடிப்படையில் சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசார், பெண் வன்கொடுமை தடுப்பு சட்டம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின் கீழ் அவர் மீது வழக்குப்பதிவு செய்தனர்.

இந்த வழக்கை விசாரித்த சிறப்பு கோர்ட்டு, நடிகர் எஸ்.வி.சேகருக்கு ஒரு மாதம் சிறை தண்டனையும், ரூ.15 ஆயிரம் அபராதமும் விதித்து கடந்த ஆண்டு பிப்ரவரியில் தீர்ப்பளித்தது. சிறப்பு கோர்ட்டு விதித்த ஒரு மாதசிறைதண்டனையை சென்னை ஐகோர்ட்டும் உறுதி செய்தது.

ஒரு மாத சிறை தண்டனையை ரத்து செய்யக் கோரியும், தண்டனைக்கு இடைக்கால தடை விதிக்க கேட்டும், நடிகர் எஸ்.வி.சேகர் சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் மேல் முறையீடு செய்யப்பட்டது. இந்த மனுவை சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் சூர்யகாந்த், என். கோடீஸ்வர் சிங் ஆகியோர் அடங்கிய அமர்வு நேற்று விசாரித்தது. பின்னர் புகார்தாரரான பெண் பத்திரிகையாளரை தொடர்பு கொண்டு மன்னிப்பு கோர எஸ்.வி.சேகருக்கு அவகாசம் அளிப்பதாக நீதிபதிகள் தெரிவித்தனர். அதற்காக சரணடைவதற்கு அளிக்கப்பட்ட காலக்கெடுவை ஜூலை 17ந் தேதி வரை நீட்டிக்கிறோம் என உத்தரவிட்டனர்.

# மே 7, 8ம் தேதிகளில் விளையாட்டு விடுதிகளுக்கான மாணவ, மாணவியர்கள் சேர்க்கை அறிவிப்பு

சென்னை ஏப்.28

2025, 2026ம் ஆண்டு விளையாட்டு விடுதிகளுக்கான மாணவ, மாணவியர்கள் சேர்க்கை தொடர்பாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய செயலர், இளைஞர் நலன் இயக்குநர் மேகநாத ரெட்டி வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் விளையாட்டுத் துறையில் சாதனைகள் படைப்பதற்கு ஏற்ப, அறிவியல் பூர்வமான விளையாட்டு பயிற்சி, தங்குமிட வசதி மற்றும் சத்தான உணவுடன்கூடிய விடுதிகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் 28 இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இவ்விளையாட்டு விடுதி சேர்க்கைக்கான விண்ணப்பப்படிவம் 17.4.2025 முதல் www.sdat.gov.in என்ற இணையதள முகவரியில் வெளியிடப்பட்டுள்ளது.

விளையாட்டு விடுதியில் சேர விருப்பமுள்ள 7, 8, 9 மற்றும் 11 ஆகிய வகுப்பு பயிலும் மாணவ, மாணவிகள் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கலாம். ஆன்லைன் விண்ணப்பத்தினைபூர்த்தி செய்து பதிவேற்றம் செய்வதற்கான கடைசி நாள் 5.5.2025 அன்று மாலை 5 மணி ஆகும். தேர்வுக்கு ஆன்லைன் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

மேலும் தகவல்களுக்கு ஆடுகள தகவல் தொடர்பு மைய அலைப்பேசியினை 9514000777 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு விபரத்தினை பெற்றுக் கொள்ளலாம். விளையாட்டு விடுதியில் சேர விரும்பும் மாணவ, மாணவியருக்கான மாவட்ட அளவிலான தேர்வுப் போட்டிகள் வருகின்ற 7.5.2025 அன்று காலை 7 மணியளவில் ஆண்களுக்கும், 8.5.2025 அன்று காலை 7 மணியளவில் பெண்களுக்கும் கீழ்காணும் விபரப்படி நடைபெற இருப்பதால் ஆன்லைனில் விண்ணப்பித்தவர்கள் மட்டுமே தவறாது கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதற்கான தகவல்கள் குறுஞ்செய்தி, வாட்ஸ்ஆப் மூலமாக உரியவர்களுக்கு தெரிவிக்கப்படும்.

தடகளம் (Athletics), கூடைப்பந்து (Basketball), கால்பந்து (Football), வளைகோல்பந்து (Hockey), கபாடி (Kabaddi), கையுந்து பந்து (Volleyball) ஆகிய 6 வகையான விளையாட்டுக்களில் பங்கேற்க விரும்பும் மாணவர்கள், மாணவியர்கள் என இருபாலரும் (Both Boys & Girls) மற்றும் கிரிக்கெட் (Cricket) விளையாட்டில் பங்கேற்க விரும்பும் மாணவர்கள் (Boys only) ஆகியோர் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் அந்தந்த மாவட்ட விளையாட்டு அரங்கங்களில் முறையே ஆண்களுக்கு 7.5.2025 காலை 7 மணி, பெண்களுக்கு 8.5.2025 காலை 7 மணி என்றவாறு மாவட்ட அளவிலான தேர்வுகள் நடைபெறும். மாவட்ட அளவிலான தேர்வில் தெரிவு செய்யப்பட்டவர்கள் மாநில அளவிலான தேர்வுக்கு தகுதி பெறுவர். அதன் விவரம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் www.sdat.tn.gov.in எனும் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் வெளியிடப்படும்.

மேலும் கீழ்காணும் விளையாட்டுகளுக்கு நேரடியாக மாநில அளவிலான தேர்வுப் போட்டிகள் 12.5.2025 அன்று பின்வரும் விவரப்படி நடைபெறும்.

வாள்விளையாட்டு (ஆ & பெ) Fencing (Both Boys & Girls), ஜூடோ (ஆ & பெ) Judo (Both Boys & Girls), குத்துச்சண்டை (ஆ) Boxing (Boys) ஆகிய 3 விளையாட்டுகளுக்கு சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் 12.5.2025 காலை 7 மணிக்கு மாநில அளவிலான தேர்வுகள் நடைபெறும்.

பளுதூக்குதல் (ஆ) & (பெ) Weightlifting (Both Boys & Girsl), வுஷூ (ஆண்கள் மட்டும்) Wushu (Boys) ஆகிய 2 விளையாட்டுகளுக்கு தஞ்சாவூர் அன்னை சத்யா விளையாட்டரங்கத்தில் 12.5.2025 காலை 7 மணிக்கு மாநில அளவிலான தேர்வுகள் நடைபெறும். நீச்சல் விளையாட்டுக்கு (ஆ) & (பெ) Swimming (Both Boys & Girls) சென்னை, வேளச்சேரி, AGM Complexல் 12.5.2025 காலை 7 மணிக்கு மாநில அளவிலான தேர்வுகள் நடைபெறும். குத்துச்சண்டை (பெ) Boxing (Girls), ஸ்குவாஷ் (ஆண்கள் மட்டும்) Squash (Boys) ஆகிய 2 விளையாட்டுகளுக்கு சென்னை, ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கத்தில் 12.5.2025 காலை 7 மணிக்கு மாநில அளவிலான தேர்வுகள் நடைபெறும். கைபந்து விளையாட்டுக்கு (ஆ) & (பெ) Handball (Both Boys & Girls) திருச்சி அண்ணா விளையாட்டரங்கில் 12.5.2025 காலை 7 மணிக்கு ஆண்களுக்கும், 13.5.2025 காலை 7 மணிக்கு பெண்களுக்கும் மாநில அளவிலான தேர்வுகள் நடைபெறும்.

மல்யுத்தம் (ஆண்கள் மட்டும்) Wrestling (Boys), டேக்வாண்டோ (ஆ) & (பெ) Taekwondo (Boys & Girls) ஆகிய 2 விளையாட்டுகளுக்கு கடலூர் மாவட்ட விளையாட்டரங்கத்தில் 12.5.2025 காலை 7 மணிக்கு மாநில அளவிலான தேர்வுகள் நடைபெறும். மல்லர்கம்பம் விளையாட்டுக்கு (ஆண்கள் மட்டும்) Mallakhamb (Boys) விழுப்புரம் மாவட்ட விளையாட்டரங்கத்தில் 12.5.2025 காலை 7 மணிக்கு மாநில அளவிலான தேர்வுகள் நடைபெறும்.

விளையாட்டுத் தகுதிகள்:

தனிநபர் மற்றும் குழு விளையாட்டுப் போட்டிகளில் விண்ணப்பிப்பவர்கள் மாவட்ட, மாநில அளவில் குடியரசு/ பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகள்/ அங்கீகரிக்கப்பட்ட மாநில விளையாட்டுக்கழகங்கள் நடத்தும் போட்டிகளில் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்றிருத்தல் வேண்டும். (அல்லது) தமிழ்நாடு அணியில் தேர்வு செய்யப்பட்டு தேசிய அளவில் தேசிய விளையாட்டு சம்மேளனங்கள்/ இந்திய பள்ளி விளையாட்டுக்கூட்டமைப்பு (SGFI)/ இந்திய விளையாட்டு அமைச்சகம் நடத்தும் போட்டிகளில் கலந்து கொண்டவர்களும், பன்னாட்டு அளவில் அங்கீகாரம் பெற்ற போட்டிகளில் பதக்கங்கள் பெற்றவர்களும் மற்றும் கலந்து கொண்டவர்களும் மாவட்ட, மாநில அளவில் முதலமைச்சர் கோப்பை போட்டிகளில் பதக்கம் பெற்றவர்கள் மற்றும் கலந்து கொண்டவர்கள் விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ரூ.20 கோடி செலவில் பசுமை பள்ளிகள் திட்டம் அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவிப்பு

சென்னை, ஏப்.28

சட்டசபையில் நிதித்துறை மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மானிய கோரிக்கையின் போது அமைச்சர் தங்கம் தென்னரசு புதிய அறிவிப்புகளை வெளியிட்டார். அதன் விவரம் வருமாறு:

பசுமைப் பள்ளிகள் திட்டத்தின் வாயிலாக, பள்ளிகளில் சூரிய ஒளி ஆற்றல் பயன்பாடு மூலம் மின் விளக்குகள், பம்புகள், ஆழ்துளைக் கிணறுகள், மழை நீர் சேகரிப்பு அமைப்புகள், உர உற்பத்தி, காய்கறி மற்றும் மூலிகைத் தோட்டங்கள் மற்றும் பழ மரங்கள் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டு, பிளாஸ்டிக் இல்லா சூழல் உருவாக்கப்பட்டு வருகிறது. மேலும் 100 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

சாலைவழி வாகனங்களின் உமிழ்வு வெளியீட்டை தொலைவில் இருந்து கண்காணிக்கும் விதமாக தேர்ந்தெடுக்கப்பட்ட சுங்கச்சாவடிகளில் முன்னோட்ட அடிப்படையில் வாகன உமிழ்வைத் தொலைவில் இருந்து கண்காணிக்கும் முறையை ரூ.15 லட்சம் செலவில் செயல்படுத்தப்பட உள்ளது.

# போராடி, போராடி திட்டங்களை பெற வேண்டியதில்லை, கேட்டாலே கிடைக்கும் அமைச்சர் எ.வ.வேலு பேச்சு



சென்னை, ஏப்.28

சட்டசபையில், விடுதலை சிறுத்தைகள் கட்சி எம்.எல்.ஏ. ஷாநவாஸ் (நாகப்பட்டிணம்) பேசினார். அப்போது அவர், திராவிடர் என்பதை முதன் முதலில் உயர்த்தி பிடித்து, செயல்பட்ட அயோத்திதாசர் பண்டிதரின் உருவப்படத்தை இந்த சட்டசபையில் வைக்க வேண்டும். அதே போல் நெல்லையில் ஒரு பெரிய நூலகத்தை ஏற்படுத்தி அதற்கு காயிதே மில்லத் பெயரை வைக்க வேண்டும் என்றார்.

தொடர்ந்து அவர், 'அரசுபள்ளிகளைபோல, அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு அரசின் அனைத்து திட்டங்களும் சேர நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒவ்வொரு திட்டத்தையும் அவர்கள் போராடி, போராடி பெற வேண்டிய நிலை இருக்கிறது' என்றார்.

இதற்கு அமைச்சர் எ.வ.வேலு, 'போராடி, போராடி திட்டங்களை பெற வேண்டியதில்லை. கேட்டாலே கிடைக்கும். இன்றைக்கு அரசு பள்ளிகளை தாண்டி மற்ற பள்ளிகளில் கூட காலை உணவு திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது' என்றார்.

# பாதுகாப்பான முறையில் பட்டாசு தொழில் நடைபெற உரிய நடவடிக்கை: செல்வப்பெருந்தகை பேச்சு

சென்னை, ஏப்28

தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள எக்ஸ்தளபதிவில், விருதுநகர் மாவட்டம், சிவகாசி அருகே எம். புதுப்பட்டியில் தனியார் பட்டாசு ஆலையில் இன்று ஏற்பட்ட வெடி விபத்தில் 3 தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழந்துள்ள செய்தி அறிந்து மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைகிறேன். மேலும், பலர் படுகாயமடைந்துள்ளனர். இத்தகைய வெடிவிபத்து சம்பவங்கள் அடிக்கடி நடைபெறுவதும், அப்பாவித் தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழப்பதும் தொடர்கதையாக நடந்து வருகிறது. இதனை தடுக்கின்ற வகையில் பட்டாசு தொழிற்சாலைகளில் உரிய கட்டுப்பாடுகளை செயல்படுத்தாத காரணத்தால் தான் இத்தகைய விபத்துகள் ஏற்படுகின்றன.

அதிகாரிகளின் உரிய கண்காணிப்பு இல்லாத நிலையில் தொழிற்சாலை ஒழுங்குமுறை நடைமுறைகள் பின்பற்றப்படுவதில்லை. இது போன்ற அலட்சியப் போக்கு குறித்து உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும். விசாரணைகளின் இறுதியில் விபத்துகள் ஏற்படாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து, பாதுகாப்பான முறையில் பட்டாசு தொழில் தொடர்ந்து நடைபெற உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென தமிழ்நாடு அரசை கேட்டுக் கொள்கிறேன்.

பட்டாசு ஆலை விபத்தில் இறந்தவர்களின் குடும்பத்தினருக்குஇழப்பீட்டு தொகை வழங்குவதோடு, காயமடைந்தவர்களுக்கு உரிய நிவாரணமும் அரசு செலவில் உயரிய சிகிச்சையும் அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். மேலும், விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன். படுகாயம் அடைந்தவர்கள் விரைவில் குணமடைய விழைகிறேன். என தெரிவித்துள்ளார் .

## அதிக லாபம் தருவதாக கூறி ஆன்லைன் மோசடி; ரூ. 17 லட்சத்தை இழந்த சென்னை தொழிலதிபர்




சென்னை, ஏப்.28

சென்னை சேத்துப்பட்டை சேர்ந்த தொழிலதிபர் சாஜித் (வயது 55). இவரது செல்போன் எண்ணுக்கு வாட்ஸ்அப்பில் மெசேஜ் வந்துள்ளது. அதில், பிரபல நிறுவனம் பெயரில் பங்கு சந்தையில் குறைந்த பணத்தை முதலீடு செய்தால் அதிக லாபம் கிடைக்கும் என்ற பதிவு வந்துள்ளது. அத்துடன் பணத்தை முதலீடு செய்வதற்கான 'லிங்க்' ஒன்றும் வந்துள்ளது. குறைந்த முதலீட்டில் அதிக லாபம் என்ற கவர்ச்சிகர வார்த்தையால் ஈர்க்கப்பட்ட சாஜித் அந்த லிங்க் மூலம் பல கட்டங்களாக 17 லட்சத்து 10 ஆயிரம் பணத்தை முதலீடு செய்துள்ளார்.

ரூ. 17 லட்சம் முதலீடு செய்தும் அதற்கான லாபம் கிடைக்காததால் வாட்ஸ் அப்பில் வந்த நிறுவனத்தின் எண்ணை தொடர்புகொண்டார். அப்போது, மோசடி கும்பலின் வலையில் சிக்கி ரூ.17 லட்சத்தை பறிகொடுத்ததை சாஜித் உணர்ந்தார்.

இந்த ஆன்லைன் மோசடி குறித்து சேத்துப்பட்டு போலீசில் அவர் புகார் அளித்துள்ளார்.

புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்த சைபர் கிரைம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். 'ஆன்லைன்' மோசடி சம்பவங்கள் குறித்து மத்திய, மாநில அரசுகள், ரிசர்வ் வங்கி, சைபர் கிரைம் போலீசார் சார்பில் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. எனினும் அதிக லாபம் என்ற ஆசை வார்த்தையில் மயங்கி 'ஆன்லைன்' மோசடி கும்பல் விரிக்கும் மாய வலையில் சிக்கி பணத்தை பறிகொடுக்கும் சம்பவங்களும் தொடர்கதையாகி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒகேனக்கல்லில் வேட்டை தடுப்பு சரக அலுவலர் மீது வழக்கு பதிவு

பென்னாகரம், ஏப். 28

ஒகேனக்கல் அருகே வாலிபரை தாக்கிய வேட்டை தடுப்பு வனசரக அலுவலர் உள்ளிட்ட 4 பேர் மீது ஒகேனக்கல் போலீஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

ஒகேனக்கல் அருகே நடுத்திட்டு பகுதியைச் சேர்ந்த மாதேஷ் மகன் சிவசக்தி (21) பி.காம் பட்டதாரி. இவர், மீன் பிடிக்கும் தொழில் செய்து வருகிறார்.



அண்மையில் நடுத்திட்டு பகுதியில் வீட்டில் தூங்கிக் கொண்டிருக்கும்போது வேட்டை தடுப்பு வன சரக அலுவலர் ஆலயமணி தலைமையிலான வனவர் பிரீத்தி சக்கரவர்த்தி உள்ளிட்ட நான்கு பேர் அடங்கிய குழுவினர், கொண்டு வந்த பொருளை வீட்டில் வைக்க முயற்சி செய்த போது, இளைஞரிடம் தகராறு ஏற்பட்டுள்ளது. இதில் இளைஞரை வனத்துறையினர் தாக்கியுள்ளனர்.

இதில் காயமடைந்த இளைஞர் பென்னாகரம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில், அளித்த புகாரின் பேரில் ஒகேனக்கல் போலீஸார் வேட்டை தடுப்பு வனச்சரக அலுவலர் ஆலயமணி, வனவர் பிரீத்தி சக்கரவர்த்தி உள்ளிட்ட நான்கு பேர் மீது வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

## தீர்ப்பை அமல்படுத்த கோரும் மனுக்களை 6 மாதங்களுக்குள் விசாரித்து முடிக்க வேண்டும்: ஐகோர்ட்டு உத்தரவு



சென்னை, ஏப்.28

சொத்து, பணம் தொடர்பான சிவில் வழக்குகளில் கோர்ட்டு பிறப்பிக்கும் தீர்ப்புகளை அமல்படுத்த கோரும் (இ.பி.,) மனுக்கள் விசாரணை கோர்ட்டுகளில் தாக்கல் செய்யப்படும். இந்த மனுக்கள் மீது சம்பந்தப்பட்ட நீதிபதி பிறப்பிக்கும் உத்தரவின் அடிப்படையில், சொத்துக்கள், வாகனங்கள் ஜப்தி செய்யப்படும். வழக்குகளில் தொடர்புடைய சொத்துக்களை மீட்டு சாதகமான தீர்ப்பு பெற்றவர்களுக்கு வழங்கப்படும். இந்த இ.பி. மனு கீழ் கோர்ட்டுகளில் நீண்ட காலமாக நிலுவையில் கிடப்பதாகவும், இதனால் கோர்ட்டில் சாதகமான தீர்ப்புகளை பெற்றவர்கள், அதன் பயனை அடைய முடியவில்லை என்றும் குற்றச்சாட்டு உள்ளது.

இந்தநிலையில், இது தொடர்பான வழக்கை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு, நிலுவையில் உள்ள அனைத்து இ.பி. மனுக்களை 6 மாதங்களுக்குள் விசாரித்து தீர்ப்பளிக்க வேண்டும் என்று அனைத்து கீழ் நீதிமன்றங்களுக்கும் சம்பந்தப்பட்ட ஐகோர்ட்டு உத்தரவிட வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது.

இதன்படி, சென்னை ஐகோர்ட்டு தலைமை பதிவாளர் எஸ்.அல்லி, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து கீழ் நீதிமன்றங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பியுள்ளார். அதில், ''பல்வேறு கோர்ட்டுகளில் நிலுவையில் உள்ள அனைத்து இ.பி. மனுக்களையும் 6 மாதங்களுக்குள் விசாரித்து தகுந்த உத்தரவு பிறப்பிக்க வேண்டும். தவறினால், ஐகோர்ட்டின் நிர்வாக தரப்புக்கு சம்பந்தப்பட்ட நீதிபதி பதில் அளிக்க வேண்டும். இந்த உத்தரவை அனைத்து நீதிபதிகளும் கவனத்துடன் தீவிரமாக பின்பற்ற வேண்டும்'' என்று உத்தரவிட்டுள்ளார்.

## மாந்தோப்பில் 100 கிலோ எடைகொண்ட புகையிலைப் பொருட்களை பதுக்கி வைத்திருந்த நபர் கைது




ஆலங்குளம் ஏப் 28

தென்காசி மாவட்டத்தில் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனையை முற்றிலும் தடுக்கும் பொருட்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ். அரவிந்த் அவர்களின் உத்தரவின் பேரில் தனிப்படை அமைத்தும், மாவட்டம் முழுவதும் தொடர் வாகன சோதனையில் ஈடுபட்டும், புகையிலை பொருட்கள் விற்பனை செய்யப்படும் கடைகளை உணவு பாதுகாப்பு துறை அலுவலர்களின் மூலம் கடைக்கு சீல் வைக்கப்பட்டும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டும் வருகிறது.

இந்நிலையில் ஆலங்குளம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மாயமான்குறிச்சி பகுதியில் புகையிலைப் பொருட்கள் பதுக்கி வைத்திருப்பதாக காவல்துறைக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் ஆலங்குளம் காவல் ஆய்வாளர் பேர்னார்ட் சேவியர் அவர்களின் அறிவுரையின் பேரில் சார்பு ஆய்வாளர் சத்திய வேந்தன் அவர்களின் தலைமையிலான காவல்துறையினர் மாயமான் குறிச்சி பகுதியில் அமைந்துள்ள மாந்தோப்பில் உள்ள குடோனில் புகையிலைப் பொருட்களை பெரிதளவு பதிக்க வைத்து அவற்றை தேவைக்கேற்ப இருசக்கர வாகனத்தில் எடுத்துச் சென்று விற்பனை செய்து வந்த குருவன் கோட்டை அம்மன் கோவில் தெருவை சேர்ந்த சிவசுப்பிரமணியன் என்பவரின் மகன் கிருஷ்ணமூர்த்தி வயது 41 என்ற நபரை கையும் களவுமாக சுற்றி வளைத்து கைது செய்தனர். மேலும் அவரிடம் இருந்து 100 கிலோ எடை கொண்ட 70,000/ ரூபாய் மதிப்பிலான அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் மற்றும் ஒரு இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.

## சிலம்பு எக்ஸ்பிரஸ் ரெயிலில் பயணிகள் போராட்டம்

சென்னை , ஏப்.28

தாம்பரத்தில் இருந்து செங்கோட்டை செல்லக்கூடிய சிலம்பு எக்ஸ்பிரஸ் ரெயிலில் நேற்று இரவு 9 மணிக்கு 72 பேர் பயணம் செய்யக்கூடிய மூன்றாம் வகுப்பு ஏ.சி. பெட்டியில் ஏசி வேலை செய்யவில்லை. இதனால் ரெயிலை இயக்க விடாமல் பயணிகள் அபாய சங்கிலியை பிடித்து ரெயிலை நிறுத்தினர்.

இதன்பின்னர் பயணிகள் ரெயில் நிலையத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து ரெயில்வே பாதுகாப்பு படை போலீசார் பயணிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அதன் பிறகு



ஏ.சி. சரி செய்யப்பட்டு 1½ மணி நேரம் தாமதமாக ரெயில் புறப்பட்டு சென்றது.

## காஷ்மீர் பயங்கரவாத தாக்குதலில் பலியான குடும்பங்களுக்கு அஞ்சலி

ராஜபாளையம்ஏப் 28

காஷ்மீரில் உள்ள பிரபல சுற்றுலா தளமான பஹல்காமில் சுற்றுலா பயணிகள் மீது நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதலில் பலியான குடும்பங்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக விருதுநகர் மேற்கு மாவட்டம் காங்கிரஸ் மற்றும் ராஜபாளையம் நகர காங்கிரஸ் சார்பில் ராஜபாளையம் நேரு பவனத்தில் மெழுகுவர்த்தி ஏந்தி மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் சக்தி மோகன், டைகர் சம்சுதீன், தளவாய் பாண்டியன், எச்.எம்.



எஸ். கண்ணன், ஸ்ரீமான் ராமசந்திரன் ராஜா, வெங்கட்ராமன், சிவசுப்பிரமணியன், பால்கனி, சக்தி ராஜா, ராஜா ராம், விஷ்ணு சங்கர், வெங்கடேஷ், கவுன்சிலர் புஷ்பம் கீர்த்தி, பச்சையாத்தன், தங்கவேல், விஜயன், கிழக்கு வட்டார தலைவர் கோபாலகிருஷ்ணன் உட்பட டலர் கலந்து கொண்டனர்.

## தக் லைப் படத்தின் 2வது பாடல் அப்டேட்




36 வருடங்களுக்குப் பிறகு கமல்ஹாசன் மணிரத்னம் கூட்டணியில் உருவாகியுள்ள படம் 'தக் லைப்'. இப்படத்தில் நடிகர் சிம்பு, திரிஷா, ஜோஜு ஜார்ஜ், ஐஸ்வர்யா லட்சுமி, கவுதம் கார்த்திக் மற்றும் பாலிவுட் நடிகர் அலி பசல் உள்ளிட்டோர் முக்கிய காதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்திருக்கும் இப்படத்தை ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல், மெட்ராஸ் டாக்கீஸ், ரெட் ஜெயன்ட் மூவிஸ் இணைந்து தயாரித்துள்ளது. இப்படம் வருகிற ஜூன் 5ம் தேதி திரைக்கு வருகிறது.

'தக் லைப்' படத்தின் முதல் பாடலான 'ஜிங்குச்சா' வெளியாகி மக்களிடையே பெறும் வரவேற்பை பெற்று வருகிறது. இத்திரைப்படத்தின் 'ஜிங்குச்சா' பாடல் யூடியூபில் 2 கோடி பார்வைகளை கடந்துள்ளது. இப்பாடலை கமல்ஹாசன் வரிகளில் ஆதித்யா, வைஷாலி சமந்த், சக்தி ஸ்ரீ கோபாலன் இணைந்து பாடியுள்ளனர்.

வருகிற மே 16ந் தேதி சென்னை நேரு ஸ்டேடியத்தில் 'தக் லைப்' படத்தின் இசை வெளியீட்டு விழா நடைபெற உள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

இந்நிலையில்இந்தபடத்தில்இருந்துமெலோடிபாடல்ஒன்றுவெளியாகஉள்ளதாகதகவல்வெளியாகியுள்ளது . இந்த பாடல் வருகின்ற மே மாதம் 7ம் தேதி வெளியாகும் என நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. விரைவில் அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## "துடரும்" படத்தின் ஓ.டி.டி உரிமையை பெற்ற பிரபல நிறுவனம்




மலையாள சினிமாவில் சூப்பர் ஸ்டாராக இருக்கும் மோகன்லால், 'நெரு', 'மலைக்கோட்டை வாலிபன்' படங்களைத்தொடர்ந்து தனது 360 வது படத்தில் நடித்து முடித்துள்ளார். இப்படத்தை, இயக்குனர் தருண் மூர்த்தி இயக்குகிறார். 'ஆப்ரேஷன் ஜாவா', 'சவுதி வெள்ளக்கா' படங்களை இயக்கியதன் மூலம் இவர் கவனம் பெற்றார். ரஞ்சித் தயாரிக்கும் இப்படத்திற்கு ஜேக்ஸ் பிஜாய் இசையமைத்துள்ளார். இப்படத்தில் மோகன்லாலுடன் நடிகை ஷோபனா முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். 1985ல் முதன்முதலாக மோகன்லால் ஷோபனா இணைந்து 'அவிடத்தி போலே இவிடேயும்' என்ற படத்தில் நடித்தார்கள். கடைசியாக 2004ல் மாம்பழக்காலம் என்ற படத்தில் இணைந்து நடித்தார்கள். தற்போது மீண்டும் 20 வருடங்களுக்கு பிறகு இணைந்து நடித்துள்ளனர். இப்படத்திற்கு தற்காலிகமாக 'எல்360' என்று பெயரிடப்பட்டிருந்தநிலையில், படக்குழு இப்படத்திற்கு 'துடரும்' என்று பெயரை அறிவித்தது. ஜேக்ஸ் பிஜாய் இசையமைத்த இப்படத்தின் முதல் பாடலான "கண்மணி பூவே" ரசிகர்களிடம் வரவேற்பைப் பெற்றது.

'துடரும்' படத்தின் டிரெய்லர் சமீபத்தில் வெளியானது. கார் ஓட்டுநரான மோகன்லால் தன் மனைவி குழந்தைகளுடன் எளிமையாக வாழ்ந்து வருகிறார். இந்த சூழலில் நாயகன் எதிர்கொள்ளும் பிரச்னையும் அதன் தீர்வுகளுமாக இப்படம் உருவாகியுள்ளது.

திரிஷ்யம் போலவே பேமிலி திரில்லரில் 'துடரும்' கலக்குவதாக ரசிகர்கள் படத்தை கொண்டாடி வருகின்றனர். மேலும், ஓஜி மீண்டும் வந்துவிட்டார் எனவும் தரமான பேன்பாய் சம்பவம் எனவும் புகழ்ந்துவருகின்றனர். புக்மை ஷோ செயலியில் கடந்த 24 மணி நேரத்தில் 4 லட்சத்திற்கும் மேற்பட்ட டிக்கெட்டுகள் முன்பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு முன்பு மோகன்லால் நடிப்பில் வெளியான 'எல் 2 எம்புரான்' படம் வசூலை குவித்திருந்தாலும் கலவையான விமர்சனங்களையே பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

மோகன்லால் நடித்துள்ள 'துடரும்' படத்தின் ஓ.டி.டி உரிமையை ஜியோ ஹாட்ஸ்டார் கைப்பற்றியுள்ளது. மோகன்லாலின் கடைசி சில திரைப்படங்கள் சரியாக போகவில்லை என்பதால் துடரும் படத்தை ஓ.டி.டி நிறுவனம் மிக குறைந்த விலைக்கும் வாங்கியதாக தகவல் வெளியாகியுள்ளது.

## சமுத்திரக்கனியின் பிறந்தநாளையொட்டி "காந்தா" படத்தின் புதிய போஸ்டர் வெளியீடு



அடுத்ததாக துல்கர் சல்மான் மற்றும் ராணா டகுபதி இருவரும் இணைந்து காந்தா என்ற படத்தில் நடிக்கின்றனர். இப்படத்தை செல்வமணி செல்வராஜ் இயக்குகிறார். இவர் 'தி ஹண்ட் பார் வீரப்பன்' மற்றும் நிலா திரைப்படங்களை இயக்கியுள்ளார்.

இப்படத்தில் 'மிஸ்டர் பச்சன்' திரைப்பட புகழ் பாக்யஸ்ரீ , துல்கர் சல்மானுக்கு ஜோடியாக நடிக்கிறார். இப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம் மற்றும் கன்னடம் மொழிகளில் வெளியாகவுள்ளது.

இப்படத்தை வேபாரர் பிலிம்ஸ் மற்றும் ராணா ஸ்பிரிட் மீடியா நிறுவனம் இணைந்து தயாரிக்கிறது. இப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகி வைரலானது.

இந்நிலையில்,சமுத்திரக்கனியின்பிறந்தநாளையொட்டி"காந்தா"படத்தின்புதியபோஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது.

## ஐபிஎல்: கொல்கத்தா பஞ்சாப் ஆட்டம் மழையால் ரத்து



ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன் மைதானத்தில் இன்று நடைபெற்ற ஆட்டத்தில் கொல்கத்தா பஞ்சாப் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் டாஸ் வென்ற பஞ்சாப் அணி பேட்டிங்கை தேர்வு செய்தது.

அதன்படி அந்த அணியில் தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய பிரியன்ஸ் ஆர்யா,பிரப்சிம்ரன் சிங் இருவரும் அதிரடியாக விளையாடி ரன் குவிப்பில் ஈடுபட்டனர். இருவரும் அரைசதம் கடந்த நிலையில், பிரியன்ஸ் ஆர்யா 69 ரன்களிலும், பிரப்சிம்ரன் சிங் 83 ரன்களிலும் ஆட்டமிழந்தனர்.

இந்த நிலையில் 20 ஓவர்கள் முடிவில் பஞ்சாப் அணி 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 201 ரன்கள் எடுத்தது. இதையடுத்து 202 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் கொல்கத்தா அணி பேட்டிங் செய்தது.

கொல்கத்தா அணி ஒரு ஓவர்கள் முடிவில் விக்கெட் இழப்பின்றி 7 ரன்கள் எடுத்திருந்தபோது மழை குறுக்கிட்டது . இதனால் ஆட்டம் பாதிக்கப்பட்டது.

மழை தொடர்ந்து பெய்ததால் ஆட்டம் ரத்து செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது இதனால் இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது .

## மாட்ரிட் ஓபன் டென்னிஸ்: எம்மா ராடுகானு 2வது சுற்றில் தோல்வி

மாட்ரிட் ஓபன் டென்னிஸ் தொடர் ஸ்பெயினில் நடைபெற்று வருகிறது. இதில் முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்று விளையாடி வருகின்றனர்.

பெண்கள் ஒற்றையர் பிரிவின் 2வது சுற்றில் பிரிட்டனின் எம்மா ராடுகானு, உக்ரைனின் மார்டா கோஸ்டியுக் உடன் மோதினார். பரபரப்பான இந்த ஆட்டத்தில் எம்மா ராடுகானு 4-6, 6-2, 2-6 என்ற செட் கணக்கில் தோல்வி அடைந்து தொடரில் இருந்து வெளியேறினார்.

## பாகிஸ்தானுடனான கிரிக்கெட் உறவை முறித்து கொள்ள வேண்டும் கங்குலி



ஜம்முகாஷ்மீர் மாநிலம், பஹல்காமில் பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 சுற்றுலா பயணிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்திய இந்த காட்டுமிராண்டித்தனமான செயலுக்கு விளையாட்டு பிரபலங்களும் கடும் கண்டனங்களை தெரிவித்து வருகின்றனர். இதன் எதிரொலியாக இனி வரும் காலங்களில் பாகிஸ்தானுடன் இரு தரப்பு தொடர்களில் விளையாட மாட்டோம் என்று பி.சி.சி.ஐ. உறுதி அளித்துள்ளதாக தகவல் வெளியாகி இருந்தது. இந்நிலையில், பாகிஸ்தானுடனான கிரிக்கெட் உறவை 100 சதவீதம் முறித்து கொள்ள வேண்டும் என இந்திய முன்னாள் வீரரான சவுரவ் கங்குலி கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது, 100 சதவீதம் இந்தியா இதைச் செய்ய வேண்டும் (பாகிஸ்தானுடனான உறவுகளை முறித்துக் கொள்ள வேண்டும்). கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதுபோன்ற விஷயங்கள் ஒவ்வொரு ஆண்டும் நடப்பது நகைச்சுவையாக மாறிவிட்டது. பயங்கரவாதத்தை பொறுத்துக்கொள்ள முடியாது. இவ்வாறு அவர் கூறினார்.

## ஏலத்தில் சரியான வீரர்களை எடுக்கவில்லை: சென்னை பயிற்சியாளர் பிளமிங் ஒப்புதல்

10 அணிகள் இடையிலான 18வது ஐ.பி.எல். சீசன் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதில் மிகுந்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் களமிறங்கிய 5 முறை சாம்பியன் ஆன சென்னை சூப்பர் கிங்ஸ் அணி வழக்கத்திற்கு மாறாக மோசமான செயல்பாட்டை வெளிப்படுத்தி வருகிறது. இதுவரை 9 லீக் போட்டிகளில் விளையாடியுள்ள சென்னை அணி 7 தோல்வி மற்றும் 2 வெற்றி பெற்றுள்ளது. இதனால் வெறும் 4 புள்ளிகளுடன் புள்ளி பட்டியலில் கடைசி இடத்தில் உள்ள சென்னை அணியின் பிளே ஆப் சுற்று வாய்ப்பு ஏறக்குறைய முடிவுக்கு வந்து விட்டது. நடந்த ஐதராபாத் அணிக்கு எதிரான ஆட்டத்தில் தோல்வி அடைந்த பிறகு சென்னை அணியின் தலைமை பயிற்சியாளர் ஸ்டீபன் பிளமிங் கூறுகையில்,

'ஐ.பி.எல். ஏலத்தில் மற்ற அணிகள் சிறந்த வீரர்களை எடுத்து இருக்கிறார்கள். நாங்கள் சரியான வீரர்களை எடுத்து இருக்கிறோமா? என்று கேட்டால் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். ஏலம் என்பது முழுமையான அறிவியல் இல்லை. மிருகம் போன்ற பாய்ச்சல் கொண்டது. 25 மணி நேரத்துக்குள் வீரர்களை வாங்குகிறோம், ஏலத்தின் முடிவில் மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் சோர்வடைகிறோம். இருப்பினும் எங்களுக்கு ஒரு நல்ல அணி கிடைத்து இருப்பதாகவே நான் இன்னும் நினைக்கிறேன். நாங்கள் சிறந்த அணியாக மாறுவதற்கான தூரம் வெகுதொலைவில் இல்லை. முக்கிய வீரர்களின் காயத்தாலும், ஒரு சில வீரர்கள் பார்மை இழந்ததாலும் போட்டிக்கான திட்டத்தை உருவாக்க கடுமையாக போராடினோம். அதிகமான மாற்றங்களை செய்தோம். ஒருவேளை நாங்கள் இல்லாத ஒன்றை தேட முயற்சித்து இருக்கலாம். எதுவும் எங்களுக்கு சரியாக அமையவில்லை. நிச்சயமாக நாங்கள் எடுத்த முடிவுகள், அதனால் நடந்தவைகளுக்கு எங்களுக்கு அதிக பொறுப்பு இருக்கிறது. அது 100 சதவீதம் என்னில் இருந்து தொடங்குகிறது..எஞ்சிய ஆட்டங்களில் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்த முயற்சிப்போம்' என்றார்

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.